Impressum

Berufs- und Weiterbildungsberatung BWB
Telefon 041 666 63 44
E-Mail berufsberatung@ow.ch
www.berufsberatung-ow.ch

Ausgabe 2017

Satz und Druck:
von Ah Druck AG, Sarnen



# சுவிஸில் கல்விமுறை


Informationsbroschüre für Eltern    Tamilisch

Kanton Obwalden

Bildungs- und Kulturdepartement BKD
**Amt für Berufsbildung AfB**
Berufs- und Weiterbildungsberatung BWB

# Bildungswege

EFZ = Eidgenössisches Fähigkeitszeugnis
EBA = Eidgenössisches Berufsattest
BM = Berufsmatura






# சுவிஸில் கல்விமுறை

தொழிற்கல்வியும் அதே போல் உயர்தராதரப்பத்திர வகுப்புக்களும் இளம்வயதினருக்கு கவர்ச்சிகரமான இலக்கையடைய வாய்ப்பளிக்கின்றன. வெற்றிகரமான தொழிலை மட்டுமல்லாமல், எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வில் இன்பத்தையும் அதற்கான முயற்சியையும் கல்விப்பாதை தீர்மானிக்கின்றது.

ஒரு தொழிற்கல்விக்கான தேர்வினை சுய விருப்பங்கள், ஆற்றல்கள் போன்று கற்றலுக்கான சுய திறமையும் தீர்மானிக்கின்றது. மதிப்புக்காகவோ அல்லது தொழிலுலகுக்குள் நுழைவதனை நோக்காகக் கொண்டோ தொழிற்கல்வியைத் தீர்மானிக்கக் கூடாது என்பது முக்கியமானது.

சுவிஸில் 20 வீதமான இளம்வயதினர் உயர்தராதரப்பத்திர வகுப்பினைத் (Gymnasium) தேர்வு செய்து, உயர்தராதரப்பத்திரப்பரீட்சையில் (Matura) சித்தியெய்துகின்றனர். அதில் 70 வீதமானவர்கள் 200 க்கும் மேற்பட்ட வெவ்வேறுபட்ட தொழிற்கல்விகளைக் கற்று, நாடளாவிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சான்றிதழ்களைப் (EBA oder EFZ) பெறுகின்றனர்.

தொழிற்றேர்வை மேற்கொண்டும் ஒரு தொழிற்பயிற்சியிடத்தைப் பெறுவதற்கு முயற்சித்தும் இன்னும் தொழிற்கல்விப்பயிற்சியிடம் (Berufslehre) கிடைக்காத இளம்வயதினருக்கு, Brückenangebote இருக்கின்றது.

இக் கல்விநடைமுறைக்குள் நுழைவது மிகவும் இலகுவானது. உதாரணமாக, யார் ஒரு தொழிற்கல்வியினை ஆரம்பிக்கின்றாரோ, அவர் பின்பு தொழில்உயர்தராதரப்பத்திரப் பரீட்சையைச் (Berufsmatura) சித்தியடைந்து, தொழில்நிபுணத்துவஉயர்பாடசாலையில் (Fachhochschule) அல்லது சித்திபெற்ற பிரதியீடு செய்யக் கூடிய பரீட்சைகளின் பின், ஒரு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலலாம்.

ஒவ்வொரு தொழிற்கல்வியிலும் ஒவ்வொரு தொழிலிலும் மேலதிகக்கற்கைநெறிகளுக்கான வாய்ப்புக்களிருக்கும். இணைப்பு இல்லாமல் முடிவில்லை என்னும் சுலோகம் எப்போதும் இங்கு பொருந்தும். நாடளாவி அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தராதரங்கள் மேலதிகக்கற்கைநெறிகளுக்கும் தொழிலுயர்வுக்கும் வழி வகுக்கின்றன.

அநேக வர்த்தக நிறுவனங்களில் நடைமுறையை நோக்காகக் கொண்ட, உயர்தர நிபுணத்துவதிறமையான உத்தியோகத்தர்களை உதாரணமாக, தொழிற்றேர்ச்சியுடையவர்களை BP, ஓர் உயர்தர நிபுணத்துவ பரீட்சையில் சித்தி பெற்றவர்களை HFP அல்லது ஓர் அதியுயர் தொழில்சார்பாடசாலையில் கற்றவர்களை தேடுகின்றார்கள். இவற்றுக்கு தொழிலுயர்தராதரப்பத்திரப்பரீட்சை (Berufsmatura) முன் நிபந்தனையல்ல.

வர்த்தக நிறுவனங்களுக்கிடையே பலமான சம்பள வேறுபாடு காணப்படுகின்றது. கல்விக்காலம் எவ்வளவு நீண்டது என்பதைப் பொறுத்து, அநேகமாக சம்பளமும் அதிகமாக இருக்கும்.

தொழிற்கல்வி கற்று முடிக்காதவர்கள் அல்லது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடிக்காதவர்கள் நீண்டகாலம் வேலையற்றிருக்கும் ஒரு பெரிய அபாயத்தைக் கொண்டிருக்கின்றார்கள். வேலையில்லாத நிலை ஏற்படாமல் கல்வி பாதுகாக்கும்.